S

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை,** (Pension Pay Office பின்புறம்),
**நந்தனம், சென்னை- 600 035. தொலைபேசி எண். 044-29515590**

**ஆணை நாள் 04.06.2026**

**முன்னிலை**

**திரு.பி.தாமரைக் கண்ணன், இ.கா.ப. (ஓய்வு),**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 2489/E/2023**

| | | |
|---|---|---|
| திரு கே.கதிரேசன் | .. | மேல்முறையீட்டாளர் |
| /எதிர்/ | | |
| பொதுத் தகவல் அலுவலர்/ உதவி இயக்குநர், நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்குநர் அலுவலகம், சர்வே இல்லாம், 3வது தளம், சேப்பாக்கம், சென்னை - 600 005 | .. | பொது அதிகார அமைப்பு |

**ஆணை**

1) இவ்வழக்கின் மீது முதன் முதலாக இவ்வாணையத்தில் 18.09.2024 அன்று விசாரணை நடைபெற்றது. அதன் பின்னர், 30.12.2024, 15.05.2025, 19.01.2026 மற்றும் 09.04.2026 ஆகிய தேதிகளில், இவ்வாணையத்தில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர். மனுதாரரின் மனு மீதான விசாரணை இறுதிக் கட்டத்தில் இருப்பதாகவும், அது குறித்து விரைவில் இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என்றும் தெரிவித்து அறிக்கை சமர்ப்பித்தார்.

2) அதனை தொடர்ந்து, நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்குநர் அலுவலக உதவியாளர் திருமதி எஸ்,அனிதா இவ்வாணையத்தில் 04.06.2026 அன்று ஆஜராகி, மனுதாரர் அனுப்பிய மனுவின் மீது, சென்னை, நிலவரித் திட்ட அலுவலர் / மாவட்ட வருவாய் அலுவலர் விசாரணை நடத்தி. 21.05.2026 நாளிட்ட செயல்முறை ஆணைகள் மூலம் இறுதி

உத்தரவு பிறப்பித்துள்ளதாகவும், மேற்படி செயல்முறை ஆணைகளின் நகல் மனுதாரருக்கு 27.05.2026 அன்று அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவித் , அதன் நகலையும், மனுதாரர் அதனை 03.06.2026 அன்று பெற்றுக் கொண்டதற்கு தபால் துறை இணையதள பக்கத்திலுள்ள பதிவின் நகலையும் ஆணையத்தில் சமர்ப்பித்தார்.

3) வழங்கப்பட்ட ஆவணங்களை பரிசீலித்த ஆணையம், மனுதாரர் அனுப்பிய 6(1) மனு தொடர்பாக சென்னை, நிலவரித் திட்ட அலுவலர் / மாவட்ட வருவாய் அலுவலர் விசாரணை நடத்தி, தனது 27.05.2026 நாளிட்ட செயல்முறை ஆணைகளின் மூலம் இறுதி உத்தரவு பிறப்பித்து, அதன் நகலை மனுதாரருக்கும் அனுப்பியுள்ளதன் அடிப்படையில், இந்த மேல்முறையீட்டு மனுவினை முற்றாக்கம் செய்து உத்தரவிடுகிறது.

**ஒம்/- (பி.தாமரைக் கண்ணன்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA 2489/E/2023**

**பெறுநர்**

பொதுத் தகவல் அலுவலர்/ உதவி இயக்குநர்,
நில அளவை மற்றும்
நிலவரித் திட்ட இயக்குநர் அலுவலகம்,
சர்வே இல்லம், 3வது தளம்,
சேப்பாக்கம்,
சென்னை - 600 005

திரு கே.கதிரேசன்,
எண்.6, GP மாதவன் தெரு,
தர்கா சாலை, ஜமீன் பல்லாவரம்,
சென்னை - 600 043

Copy to File
CR/PA